DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.

S.C. No. 75/2024

P.W. 11 (LW. 11 )

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் |
| தந்தை பெயர் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Assistant in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 23.09.2025.

(எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்)

முதல் விசாரணை :–

நான் தற்சமயம் நல்லிபாளையம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.06.2023 ஆம் தேதி எருமைப்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்த போது நாமக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த கணேசன் த/பெ.சிக்கண்ண கவுண்டர் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து அவரிடம் கையொப்பம் பெற்று நிலையம் வந்து 16.00 மணிக்கு எருமைப்பட்டி காவல் நிலைய கு.எண்.224/2023ல் சட்டப் பிரிவுகள் 294 பி, 324 மற்றும் 506(2) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி தேதியில் 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மல்லாயி மற்றும் ஜீவிதா ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு சாட்சிகள் முன்னிலையில் 17.30 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்து வழக்கு சம்பந்தப்பட்ட சுமார் 45 செ.மீ நீளம் உள்ள கொடுவாள் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். சம்பவ இட சாட்சிகளான மற்றும் மணி மற்றும் கற்பகம் ஆகியோரையும் மேற்படி சாட்சிகள் மல்லாயி

மற்றும் ஜீவிதா ஆகியோரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவ இடத்தை எவ்வாறு நான் கண்டறிந்தேன் என்றால் கணேசனின் வீட்டுக்கு நான் சென்ற சமயத்தில் அவருடைய மகள் இருந்தார். அவர் சம்பவ இடத்தை அடையாளம் காட்டினார். புகார்தாரர் தரப்பினருக்கும் எதிரி தரப்பினருக்கும் இடையே பிரச்சனை உள்ள மூடப்பட்ட கிணறு உள்ள இடமும் இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமும் வெவ்வேறு இடத்தில் உள்ளன என்றால் சரிதான். நான் மேற்படி கணேசனை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்ற அதே சமயத்தில் இந்த வழக்கின் 1ஆம் எதிரி சுப்பிரமணியும் மேற்படி நாமக்கல் அரசு மருத்துவமணையில் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டிருந்தவரிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றேனா என்றால் மேற்படி எதிரி சுப்ரமணியத்தின் மருத்துவ இன்டிமேஷன் அதற்கு பின்னிட்டு கிடைத்ததால் அவரிடம் அதற்கு பின்னிட்டு, மீண்டும் அரசு மருத்துவமனை சென்று புகார் வாக்குமூலம் பெற்றேன். எதிரி சுப்ரமணியத்திடம் புகார் வாக்குமூலம் பெற்ற நேரம் தற்சமயம் குறிப்பாக நினைவில்லை. எதிரி சுப்ரமணியத்திடம் இருந்து மேற்படி 14.06.2023–ம் தேதி மதியம் 04.00 மணிக்கு புகார் வாக்குமூலம் பெற்று வந்து சிஎஸ்ஆர் பதிவு செய்ததாக குறிப்பிட்டு குற்ற எண். 266/2023 முதல் தகவல் அறிக்கையை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கணேசனை மருத்துவமனையிலேயே விசாரித்து 161(3) வாக்குமூலம் பதிவு செய்தேன். ஒரே சமயத்தில் புகார் வாக்குமூலமும், 161(3) வாக்குமூலமும் மேற்படி கணேசனிடமிருந்து பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் 161(3) வாக்குமூலத்தில் மேற்படி சுப்ரமணி வெட்டியதை நான் தடுக்கவில்லை என்றால் அது கழுத்தில் பட்டு சம்பவ இடத்திலேயே நான் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் மேற்படி சமயத்திலேயே மேற்படி கணேசனால் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. 161(3) வாக்குமூலத்தில்

சொன்னார். 18.07.2023-ம் தேதி நான் முதற்கட்ட புலன் விசாரணை முடித்து காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வழக்கு கோப்பை ஒப்படைத்தேன். எதிரி சுப்ரமணியத்திடம் இருந்து 14.06.2023-ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் பெறப்பட்ட புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் 25.07.2023-ம் தேதி தான் சுமார் 11 நாட்கள் கழித்து குற்ற எண். 266/2023-ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் மேற்படி புகார் வாக்குமூலம் பெறப்பட்டதேதியில் சிஎஸ்ஆர் நெம்பர் கொடுக்கப்பட்டு பின்னிட்டு, அது விசாரணை செய்யப்பட்டு, முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு இரசீது கொடுக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, அதன் பின்னிட்டு 11 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையென தெரிந்த காரணத்தினால் தான் முதல் தகவல் அறிக்கையே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரையும், படிவம்-91-ஐயும் ஒரே நேரத்தில் தயார் செய்தேனா என்றால் ஆமாம். கைப்பற்றுதல் மகஜர் தட்டச்சு செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் அளவுகள் பேனாவால் கைப்பட எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கங்கா மருத்துவமனைக்கு சென்று யாரையும் விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி கணேசன், எதிரி சுப்ரம்ணியத்தை தாக்கிவிட்டு எதிரி சுப்ரமணி கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக அரசு மரு்துதுவமனை சென்று சேர்ந்துவிட்டு, எதிரி சுப்ரமணி மற்றும் அவருடைய மனைவியின் மீது கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்தை சரிவர விசாரணை செய்யாமல், எதிரிகள் மீது தவறுதலாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.
(மறுவிசாரணை – இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

/ஒம்/ A.சண்முகப்பிரியா

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்